
அழகுசாதன, அன்பளிப்பு விளையாட்டு, பிளாஸ்ரிக் பொருள்களையும் மணிக்கூடு றேடியோ பொலித்தின் வகைகளையும் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஜெயா
அழகு மாடம்
187, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு விலை: ரூபா 5-00 Registered as a Newspaper

# உதயன்

றேடியோ, மணிக்கூடு பொலித்தீன் வகைகளையும் அழகுசாதன, அன்பளிப்பு விளையாட்டு, பிளாஸ்ரிக் பொருள்களையும் உதிரியாகப் பெற்றுக்கொள்ள
ஜெயா
அழகு மாடம்
177 A, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/1153)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 31 சனிக்கிழமை (15-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 232



ஈழத் தமிழ் மண்ணில் நாசம் பல புரிந்த "புக்காரா ஜெட்" விமானம்

# புக்காரா விமானம் புலிகள் வீழ்த்தினர்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஸ்ரீலங்கா விமானப்படையின் "புக்காரா" குண்டு வீச்சு ஜெட் விமானம் ஒன்று நேற்றுக் காலை 7 40 மணிக்கு புலிகளின் விமான எதிர்ப்புப் படைப் பிரிவினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

வானில் வெடித்துச் சிதறிய இந்த விமானம் அச்சமயம் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த சண்டிலிப்பாய் பகுதியில் விழுந்து நொறுங்கியது.

இச்சம்பவத்தில் புக்காராவைச் செலுத்தி வந்த விமானியும் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களை அடுத்து, ஸ்ரீலங்காப் படைத் தலைமையகத்தினால் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்த விமானம் —

மிக உயரத்தில் பறந்தவாறு புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த பகுதிக்கு வந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது.

நவாலியில் சென் பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் அகதிகள் மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திய புக்காரா ரக விமானமே சுட்டுவீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

விமானத்தின் சிதைவுகளில் இருந்து விமானியின் சடலம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# அளவெட்டி-சண்டிலிப்பாய்பகுதியில் இராணுவம் விரட்டியடிக்கப்பட்டது!

## வியூகங்களை உடைத்து ஊடுருவி முன்னேறி புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை மூலம் முன்னேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினரை நேற்றுக்காலை அளவெட்டி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் இருந்து விரட்டியடித்து அப்பிரதேசங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

படையினர் முன்னேறிய ஏனைய பகுதிகளை மீட்பதற்காக அங்கு நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து கடும் தாக்குதலைத் தொடுத்ததை அடுத்து அப்பிரதேசங்களில் தொடர்ந்து உக்கிரச் சண்டை நடைபெற்றது.

நேற்று அதிகாலை 1.08 மணி அளவில் அளவெட்டிப் பகுதியில் படையினரின் வியூகங்களை ஊடறுத்துக் கொண்டு முன்னேறி, புலிகள் நடத்திய அதிரடியுடன் படையினரை விரட்டியடிக்கும் சண்டை ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து நேருக்கு நேர் இரு தரப்பாரும் நீண்ட நேரமாக மோதிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 100க்கு அதிக படையினர் பலி!

அளவெட்டி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்ப் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தாக்குதல்களில் நூற்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதாகவும், மேலும் பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 12 படையினரின் சடலங்களே மீட்கப்பட்டதாகவும் —

மேலும் சிலர் உயிரிழந்தி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்கள் புலிகள் அள்ளினர்

சண்டிலிப்பாய் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது அதிநவீன ஆயுதங்கள் உட்பட பெருந்தொகையான ஆயுத தளபாடங்களை விடுதலைப் புலிகள் அள்ளினார்கள். ஏ. கே. எல். எம் ஜி., 50 கலிபர் துப்பாக்கிகள் உட்பட பல நவீன ஆயுதங்களை புலிகள் அள்ளி எடுத்தனர்.

தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்காக படையினர் கொண்டு வந்த பெருமளவிலான முட்கம்பிச் சுருள்களும், மண் மூடைகளை அமைக்கவெனக் கொண்டு வந்த பெருமளவான சாக்குகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## முச்சந்தி முரளி



அப்ப பின்னோக்கிப் பாய்கிற நடவடிக்கை ஆரம்பம் என்று சொல்லுங்கோ!......

## புலிகள் பதுங்கியது பாயவே!

தற்போதைய இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்காப் படைகள் ஆரம்பித்த போது, புலிகள் சற்று பின்வாங்கியது போல காட்டிக் கொண்டது. பாரிய தாக்குதலுக்கு தயா

[5ஆம் பக்கம் பார்க்க]

## 12 குண்டுகளையும் வீசும் சக்தி கொண்ட புக்காரா

யாழ்ப்பாணம், ஜூலை 15

விடுதலைப் புலிகள் நேற்று சண்டிலிப்பாய் பகுதியில் சுட்டு வீழ்த்திய "புக்காரா" (1ஏ-58ஏ) விமானம் ஒரே சமயத்தில் 125 கிலோ கிறாம் எடையுள்ள மொத்தம் 12 குண்டுகளைக் கொண்டு வந்து வீசக்கூடிய வல்லமை உள்ளது

முன்னர் எல்லாம் நான்கு அல்லது ஆறு குண்டுகளை வீசிய இந்த "புக்காரா" முன்னேறிப் பாய்தல் "நடவடிக்கையின் போது ஒரே சமயத்தில் 9 குண்டுகளையும் வீசியது. கடந்த ஒன்பதாம் திகதி நவாலி [illegible] ஒன்பது

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 55 வேங்கைகள் வீரச்சாவு

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டிப் பகுதியில் முன்னேறிய படையினரை விரட்டியடித்த வீரச்சாதனை நிகழ்வின் போது ஒன்பது பெண் போராளிகள் உட்பட 55 வேங்கைகள் களப்பலியாகினர்.

வீரச்சாவடைந்த போராளிகளில் 32 வேங்கைகளின் பெயர் விவரம் நேற்றிரவு வெளியானது.

தாக்குதலின் போது புலிகளுக்கு உதவும் பணியில் ஈடுபட்டிருந்த நாட்டுப் பற்றாளர்கள் மூவரும் வீரச்சாவடைந்தனர்.

## புனித விதைகுழிகளில் வித்துடல்கள் விதைப்பு

நேற்று நடந்த வெற்றிகர தாக்குதலில் வீரமரணமடைந்த 32 வீரவேங்கைகளின் வித்துடல்கள் இன்று மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள புனித விதை குழிகளில் விதைக்கப்படும்.

இவற்றுள் 22 வீரவேங்கைகளின் வித்துடல்கள் இன்று மாலை 4-30 மணிக்கு மக்கள் அஞ்சலிக்காக கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரியின் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வைக்கப்படும்.

வீரவணக்கக் கூட்டத்தை அடுத்து இந்த மாவீரர்களின் வித்துடல்கள் இராணுவ மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

இந்த 22 வேங்கைகளின் விவரம் வருமாறு:

★ மறைமகன் (சுப்பிரமணியம் சத்தியசீலன் — ஏழாலை)

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்களுடன் வந்த வாகனங்கள் அழிப்பு!

நேற்று அதிகாலை புலிகள் நடத்திய அதிரடியின் போது படையினரின் இரு புல்டோஸர்களையும் மற்றும் வெடிப்பொருள்கள், ஷெல்கள் போன்றவற்றை ஏற்றிவந்த ஒரு டிரக், ஒரு ஜீப், ஒரு டிராக்டர் ஆகியவற்றையும் தாக்கி அழித்தனர்.

அந்த வாகனங்களில் இருந்த வெடிப்பொருள்களும் வெடித்துச் சிதறின.

இராணுவத்தினர் பயன்படுத்திய மற்றும் இரு வாகனங்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை மீட்டு வருவதற்கு அந்த டிராக்டர்களைப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண். கிழக்கு கலட்டி

எச்சாட்டி மகா மாரியம்மன் ஆலய

# மகா கும்பாபிஷேகம்

மேற்படி ஆலய கும்பாபிஷேகம் நாளை 16 - 07 - 1995 ஞாயிறு அதிகாலை 4-00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 5-55 மணி தொடக்கம் 6-05 மணி வரையுள்ள "கோதூளிகா" சுப முகூர்த்தத்தில் மகா மாரியம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. தொடர்ந்து மகா அபிஷேகமும் நடைபெறும்.

பரிபாலன சபையும்,
கும்பாபிஷேகக் குழுவும்

(37547)

## சுன்னாகம் வங்கி வாடிக்கையாளர் கவனத்துக்கு

சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு வைத்திருப்போருக்கான பணக் கொடுப்பனவுகள் மேற்படி வங்கியின் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் வழங்கப்படும்.

காலை 9 00 முதல் 10 00 மணி வரை வாடிக்கையாளர்களுக்கான பணக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஓ! போராளிகளே!

எமது தாய்மண்ணை மீட்டெடுக்க அயராது போராடும் தங்கள் கவடுகளின் மேல் சிரம்பதித்து வணங்குகின்றேன்

தாய் நாட்டுக்காக தம்முயிரை ஈய்ந்தோரே எனது கண்ணீர் பூக்களை தங்கள் கல்லறைகளில் தூவி மீண்டும் புத்துயிர்பெற வேண்டுகின்றேன்.

உலகத் தமிழினத்தின் அஞ்சாத்தலைவனே! உன் துணிவை மெச்சுவதற்கும் என் நெஞ்சில் துணிவில்லை தலைவா! தமிழ்ஈழம் மலைநாடு வரைக்குமல்ல தமிழ்நாடு வரை வியாபிக்க வழி செய்து தமிழனின் மானம் காக்க எனது நல்லாசிகள்.

(37543) கு. சோமசுந்தரம்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

கொத்தணி – மானிப்பாய்

அவசர

## நிர்வாக சபைக் கூட்டம்

காலம்:- 17-07-95 திங்கள் மு. ப 10. 30 மணி

இடம்:- கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

தலைமை:- திரு நா. கணேசன் கொத்தணித் தலைவர்

நிகழ்ச்சி:- இடம்பெயர்ந்த கொத்தணி, அங்கத்துவ சங்கங்களின் சொத்துக்கள் பாதுகாப்பு, இழப்புக்கள், உறுப்பினர், பணியாளர் பாதிப்பு, மீள் செயல்பாடுகள் தொடர்பாக ஆராய்தல்.

எனவே சகல நிர்வாகசபை உறுப்பினர்களும் சிரமம் பாராது சமூகமளித்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

நா. கணேசன் — தலைவர்
மு. கணேஸ் — செயலாளர்

[சி/1675]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 28 — 01 — 1929



மறைவு: 15 — 06 — 1995

திருமதி

### புவனேஸ்வரி இரத்தினசிங்கம்

திதி: திருதியை 15 - 07 - 1995

வையத்துள் வாழ்வாங்கு, வாழ்ந்து வாழ்வில் எம்மையெல்லாம் உயர்த்திவிட்டு எம்மைப் பிரிந்து இறைவனடி சேர்ந்துவிட்ட எங்கள் குலதெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வ. இரத்தினசிங்கம் குடும்பத்தினர்

டச்சுவீதி,
இருபாலை,
கோப்பாய்

[37542]

## கண்ணீர் அஞ்சலி

அகால மரணமடைந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை சேர்ந்த கிராம அலுவலர்கள்

**செல்வி. ஹேமலதா செல்வராசா**
**கபிரியேற்பிள்ளை**
ஆகியோருக்கும்

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தை சேர்ந்த கிராம அலுவலர்

**வே. வன்னியசிங்கம்**
அவர்களுக்கும்

எமது மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் துயருறும் அவர்களது குடும்பத்தினருக்கும் எங்கள் இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கிறோம்.

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்

வலி - தெற்கு பிரதேச செயலகம்,
உடுவில்.

[சி/1673]

## வெதுப்பக உரிமையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

இன்றைய போர்க்கால சூழ்நிலையினை சாதமாகக் கொண்டு ஒரு சில வர்த்தகர்கள் வெதுப்பியின் வழமையான விலை ரூபா 6/-வினை கூடுதலாக விற்பதாக எமக்கு புகார்கள் வந்துள்ளன.

ஆகவே தயவு செய்து நீங்கள் வெதுப்பி விநியோகம் செய்யும் வர்த்தகர்களை கண்காணிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

தாங்கள் வெதுப்பி விநியோகிக்கும் கடைக்காரர்கள் கூடுதலாக விற்பது கண்டுபிடிக்கப்பட்டால், தங்கள் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தலைவர்,
யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

[சி-1671]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(துரைராசா)

[ஓய்வுபெற்ற அரசாங்க மரக்கூட்டுத்தாபன அதிகாரி திருகோணமலை — யாழ்ப்பாணம்]

மண்ணில்: 1 — 10 — 1931

விண்ணில் 15 — 06 — 1995

அன்பெனும் விளக்கு எங்களின் தந்தை
விண்ணகம் சென்றோர் திங்கள் மறைந்தது
புன்னகை பூத்தவுன் பூமுகம் நினைந்து
இன்னமும் எம்மவர் இதயம் கலங்குதே.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

205, [illegible],
யாழ்ப்பாணம்.

[37541]

உ
சிவமயம்

இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்

"இந்துதர்மம்" மலர் - 09

## வெளியீட்டு விழா

காலம்; 15-07-1995 சனிக்கிழமை காலை 10.00 மணி (இரதோற்சவ நாள்)

இடம்: திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் கோவில்

வெளியீட்டுரை:
செல்வி புஸ்பா செல்வநாயகம் B. A.
(இளைப்பாறிய ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி)

முதற்பிரதி பெறுவோர்;
திரு. செ. சிவலிங்கம்
(உற்பத்தி முகாமையாளர், கூட்டுறவு நெசவு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்)

சிறப்புப்பிரதி பெறுவோர்:
இந்துசமய அபிமானிகள்

சஞ்சிகை வெளியீட்டு உதவி:
திரு. ஆ. ஜீவரத்தினம்
(ஸ்தபதி, ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ.மகாலிங்கம் — பதில் தலைவர்
சி. சக்நகிரீவன் — கௌரவ செயலாளர்

[37349]

## முக்கிய அறிவித்தல்

இணுவில் பரராஜசேகர பிள்ளையார் ஆலயத்துக்கு சங்க பணியாளர்கள் அனைவரையும் 15 - 7 - 95 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சங்க களஞ்சிய வகுப்புத் தொழிலாளர்கள் அனைவரும் இத்திகதியில் தவறாது சமூகமளிக்கவும்.

மாவு, சீனி போன்ற பங்கீட்டு பொருள்களை பெற்றுக்கொள்ளாத பாவனையாளர்கள் அவற்றை மேற்படி ஆலய வீதியில் தொழிற்படும் சங்க கிளையில் 15-7-95 தொடக்கம் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகிறேன்.

பொது முகாமையாளர்

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்.

(சி/1676)

## முக்கிய அறிவித்தல்

தெல்லிப்பழை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் பெற்றார் உற்றார் யாவரும் கவனிக்க வேண்டியது:—

உங்கள் பிள்ளைகளை கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் பாதுகாப்பாகப் பராமரிக்கிறோம். ஆனால் இம்மாதம் முடியும் வரையும் இவர்களை நீங்கள் அழைத்துச் சென்று உங்களோடு வைத்துப் பராமரிப்பது விரும்பத்தக்கது. தயவுசெய்து கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்தில் வந்து என்னுடன் தொடர்பு கொண்டு அழைத்துச் செல்லவும். அழைத்துச் செல்ல முடியாதவர்களும் தங்கள் இயலாமையை நேரில் வந்து தெரிவித்தால் உதவியாக இருக்கும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
சைவச்சிறுவர் இல்லம்,
கண்டிறோட், கைதடி

தகவல் தருபவர்:—
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மீதான தாக்குதலை கண்டித்து
# இலங்கை தூதரகம் முன் சென்னையில் மறியல்

சென்னை, ஜூலை 15

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா அரச படையினர் மேற்கொண்டுள்ள இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு கோரி சென்னையில் நேற்று இலங்கைத் தூதரகத்தின் முன்னால் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கட்சியின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தலைமையில் தொண்டர்கள் சுமார் 2ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இராணுவத்தாக்குதல்களில் அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழப்பதை தடுத்து நிறுத்துமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

இதனால் அப்பகுதியில் சில மணிநேரம் போக்குவரத்து தடைபட்டது. (ஐ)

## பிரபா இருக்கும் இடத்தை தேடிக்கொண்டிருக்கிறோம்
### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 15

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் எங்கு இருக்கிறார் என்பது இதுவரை தெரியவில்லை அவர் இருக்கும் இடத்தையே தற்போது தேடிக் கொண்டிருக்கிறோம். அவர் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டால் யுத்தம் முடிவுக்கு வந்து விடும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன் யாழ். நகரில் எங்கு இருக்கிறார் எனத் தெரியுமா? என பத்திரிகையாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே சரத் முனசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள 'முன்னோக்கி பாய்தல்' நடவடிக்கையின் நோக்கம் நிறைவேறும் வரை படையினர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவர்.

படையினர் முன்னேறிச் சென்று புலிகளை அழிப்பதை விடுத்து தங்களை நோக்கி வரும் புலிகளை அழிப்பதிலேயே ஈடுபடுகின்றனர்.

சண்டை நடைபெறும் இடத்தில் படையினரும், விடுதலைப் புலிகளும் மட்டுமே உள்ளனர்; ஆகையால் பொது மக்கள் கொல்லப்படுவதற்கு எதுவித காரணமும் இல்லை.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [எ]

## தென்மராட்சியில் சமைத்த உணவு விநியோகம்

தென்மராட்சி, ஜூலை 15

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதியில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிப் பாடசாலைகள், ஆலயங்கள், முகாம்கள் ஆகிய இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினரும், சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவினரும் சமைத்த உணவுகளை தினமும் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் சகல இடங்களிலும் தற்காலிக மலகூடங்களையும் அமைத்து வருகின்றனர். (ஐ-117)

## ஒரே குடும்பத்தில் நால்வர் மன்னாரில் சுட்டுக் கொலை

மன்னார் மாவட்டம் பள்ளிமுனையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் இனந்தெரியாத குழுவினரால் கடந்த ஞாயிறன்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிகள் இயக்க ஆதரவாளர்கள் என்று தெரியவருகிறது.

இளைஞர் ஒருவர் சுட்டுக் காயப்படுத்தப்பட்ட சம்பவத்திற்கு பழிவாங்கு முகமாகவே இவர்கள் நால்வரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறியவருகிறது; [ஐ]

## இடம்பெயர்ந்தோருக்கு ஒரு வார உலர் உணவு

தென்மராட்சி, ஜூலை. 15

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் உறவினர்வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான ஒரு வார கால உலர் உணவுப் பொருள்கள் இன்று வெள்ளிக்கிழமை முதல் அந்தந்தப் பிரிவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே இடம்பெயர்ந்தோர் முத்திரை பெற்றவர்களும் தமது முத்திரைக்குரிய உலர் உணவுப் பொருள்களை சங்கக்கிளைகளில் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-117)

# தேடப்படுவோர் பட்டியல்

★ அன்னசத்திரலேன், கந்தர்மடத்தைச் சேர்ந்த சிவகுமாரன், பிளக்றோட், சங்கானையைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னையாவைத் தேடுகின்றார்.

★ சண்டிலிப்பாயிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் இந்துக்கல்லூரியில் தங்கியுள்ள குணரத்தினம் இரத்தினராசா, தமது பெற்றோர் திரு. திருமதி நா. குணரத்தினத்தைத் தேடுகிறார்.

★ மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையடியைச்சேர்ந்தவரும், தற்போது பல்கலைக்கழக புதியநூலககட்டட முகாமில் தங்கியிருப்பவருமான கந்தன் சின்னத்தங்கச்சி தமது கணவனையும், மருமகன் மகன் ஆகியோரையும் தேடுகிறார்.

★ சண்டிலிப்பாய் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து, 216, நாவலர்வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அமரசிங்கம் பரமானந்தன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் கந்தையா சிறீகரனைத் தேடுகிறார்.

★ சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பில் இருந்து இடம்பெயர்ந்து, சிவா காரைக்காட்டு லேன். வண்ணார்பண்ணையில் தங்கியுள்ள திரு. செ. பவளராஜா தனது நண்பர்களான மானிப்பாயைச் சேர்ந்த திருமதி பாலசிங்கம், திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் ஆகியோரைத் தேடுகின்றார்.

★ கோணஸ் வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த கந்தையா நாகரட்ணம் அரசடி ஒழுங்கை, வடலியடைப்பைச் சேர்ந்த தனது மாமன் சின்னப்பு முத்தையாவைத் தேடுகிறார்.

★ பெரியபுலம், சுழிபுரத்தைச் சேர்ந்தவரும் தற்போது தியாகு இலந்தைக்குளம், கொழும்புத்துறையில் தங்கியுள்ளவருமான சிவகுருநாதன் தனது பெற்றோரையும், சகோதரரையும் தேடுகின்றார்.

★ மூளாய் தெற்கில் இருந்து, வெளியேறி மீசாலை புகையிரத நிலையத்தின் அருகில் தங்கியுள்ள ப. றஞ்சிதமலர் தனது அம்மம்மா வேலுப்பிள்ளை பார்வதியைத் தேடுகிறார்.

★ தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்தவரும் தற்போது திரு. த. சச்சிதானந்தம், கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் தங்கியுள்ளவருமான திருமதி தி. குணபாக்கியம் தனது கணவர் திரு, ச. திருவாதவூரரைத் தேடுகிறார்.

★ ''லையங்கிரி'' பண்ணாகத்திலிருந்து இடம்பெயர்ந்து, குலவீரசிங்கம், 239, கண்டி வீதி, சாவகச்சேரியில் தங்கியுள்ள சி. பாலச்சந்திரன் தனது மனைவியையும், மகளையும் தேடுகின்றார்.

★ ஆஸ்பத்திரியடி, அராலி மேற்கைச் சேர்ந்தவரும், தற்போது வயோதிபர் இல்லம், கைதடியில் தங்கியுள்ளவருமான யோகநாதன் சுசீலா தனது மைத்துனி குடும்பத்தினரைத் தேடுகின்றார்.

★ அன்பழகன் வீதி, இருபாலையில் தங்கியுள்ள, அராலி மேற்கைச் சேர்ந்த ந. இரத்தினகுமார் தமது பெற்றோர் மற்றும் சகோதரியைத் தேடுகின்றார்.

★ 210 (65) பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள சங்கானை கிழக்கைச் சேர்ந்த து. ரஜனிகாந்தா (பொபி) தனது மாமனார் குடும்பத்தைத் தேடுகின்றார்; அதே இடத்தில் தங்கியுள்ள ஆஸ்பத்திரி வீதி. சங்கானையைச் சேர்ந்த பொ. மகிந்தராஜா தனது தாயாரைத் தேடுகிறார்.

## பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்
### கொழும்பு சென்ற மதகுரு தகவல்

கொழும்பு, ஜூலை 15

பெரும் எண்ணிக்கையிலான குடாநாட்டு பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் என யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற மதகுருவான அஞ்சலோ தம்பியப்பா பி. பி. ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க தேவாலயத்துடன் இந்துக் கோயில் ஒன்றும் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது.

பாதுகாப்புத் தேட இடமின்றி யாழ். மக்கள் அல்லல் படுகின்றனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் சுமார் 150 சடலங்கள் குவிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களோ, மருந்துப் பொருள்களோ கிடைக்கவில்லை. அரசு உடனடியாக இவற்றை அனுப்பி வைக்க வேண்டும்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போர்க் காயங்கள்: அநாவசிய உயிரிழப்புகளைத் தவிர்ப்போம்

தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கையினால் பலநூறு மக்கள் இறந்தும், காயம் அடைந்தும் உள்ளனர். இவர்களின் அனேகரது இறப்பிற்கு அளவுக்கதிகமான இரத்தப் பெருக்கே காரணமாகும். எனவே காயம் அடைந்தவர்களது இரத்தப் பெருக்கை உடனடியாக கட்டுப்படுத்துவதனால் அநாவசிய உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியும். மருத்துவ அறிவு அற்றவர்களும் பின்வரும் வழிமுறைகள் மூலம் இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்தி அநாவசிய உயிரிழப்புக்களைத் தவிர்க்கலாம்.

★ எல்லாக் காயங்களுக்கும் தேவையான அளவு துணியை (பழைய சீலை, துவாய், சாரம், வேட்டி முதலியவை) காயத்தின் மேல் வைத்து இறுக்கமாகக் கட்டுதல் வேண்டும்.

★ தொடர்ந்து இரத்தம் பெருகினால் இதற்குமேல் மீண்டும் துணி வைத்து மேலும் இறுக்கமாகக் கட்டவும்.

★ காயப்பட்ட பகுதியை இதய மட்டத்திற்கு மேலாக உயர்த்தி வைத்தல் வேண்டும்.

★ கை கால்களில் பாரிய சிதைவுக் காயங்கள் ஏற்படும் போது இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்த காயத்திற்கு 1" 2 அங்குலம் மேலாக றபர், கயிறு, துணி, நாடா, வயர் முதலியவற்றால் மிகக் இறுக்கமாகக் கட்டுப் போடவும். இக்கட்டைஇறுகுவதற்கு சிறு தடித்துண்டைக் செருகி முறுக்கவும். இக்கட்டை ½ மணித்தியாலத்திற்கு ஒரு தடவை 5 நிமிடங்கள் இளக்கி, இரத்தப் பெருக்கு இருந்தால் மீண்டும் கட்டவும்.

★ நெஞ்சு, வயிறு போன்ற இடங்களில் ஏற்படுகின்ற காயங்களினால் கண்ணுக்குத் தெரியாமல் உடலினுள் அதிக இரத்தப் பெருக்கு ஏற்படலாம். எனவே, இப் பகுதியில் ஏற்படும் காயங்கள், வெளிப் பார்வைக்குச் சிறிதாக இருந்தாலும் அவற்றைக் கடுமையானவையாக எடுத்து விரைவில் வைத்தியசாலைக்கு அனுப்பவும். இவற்றை விட சிறந்த வழி காயம் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்வதேயாகும். இதற்கு —

★ கூட்டம் கூட்டமாக கூடி நிற்பதைத் தவிர்க்கவும்.

★ உங்கள் வாழ்விடங்களிலும் பொது இடங்களிலும் திறந்த பதுங்கு குழிகளை அமைத்துப் பயன்படுத்தவும்.

மருத்துவப்பிரிவு
தமிழீழ
விடுதலைப்புலிகள்


## மெதடிஸ்த திருச்சபை முதியோர் இல்லம்
புத்தூர்.

மேற்படி இல்லத்தில் உள்ள வயோதிப பெண்களை பராமரிக்க தகுதி வாய்ந்த பெண்கள் 26-07-95 அன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள C.L.S புத்தகசாலையில் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களோடும் தகுதியை நிர்ணயிக்க தேவையான ஆவணங்களோடும் சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றீர்கள். தாதிமார் பயிற்சி அல்லது அதையொட்டிய அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வண. S. S கருணைராஜ்
சேகர முகாமைக் குரு.

மெதடிஸ்த திருச்சபை,
யாழ்ப்பாணம். [37538]



பொது மக்களுக்கு ஓர்
## அன்பான வேண்டுகோள்

வெதுப்பியின் விலை (ரூ.6/-)யில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படவில்லை. வர்த்தகர்கள் அல்லது வெதுப்பக உரிமையாளர்கள் ரூ 6/இற்கு கூடுதலாக விற்பனை செய்தால், அருகிலுள்ள காவல் துறையுடனோ அல்லது எமது தலைமைச் செயலகத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
யாழ்.மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி/1672)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொயிலர் கோழிகளும், பன்றியும், பன்றிக் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. அண்ணா பாம், இணுவில். [சி-1668]

Broilers மற்றும் இறைச்சிக் கோழிகள் காலை 7-00 மணி தொடக்கம் கத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகை உண்டு. [37522]

### மாறிய சைக்கிள்

09-07-95 அன்று நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் வீதியில் E. 846394 இலக்க "ஹீரோ" ஆண்கள் சைக்கிள் B K2553 லுமாலா சைக்கிளுக்கு பதிலாக மாறி எடுக்கப்பட்டுள்ளது. வைத்திருப்பவர் மேற்படி கோயிலில் தொடர்பு கொள்ளவும். இரகுநாதன், இல. 122/3, பலாலி றோட், கந்தர்மடம். (37557)

### கண்ணன் திருமணசேவை

எங்களிடத்தில் சகல மதத்தவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடு மணமக்கள் உண்டு. முதல் கடிதத்திலேயே முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். 40 சாத்திரியார் லேன், அரியாலை. (37513)

# உயிர் கொல்லும் தொற்று நோய்கள் தடுக்க சுகாதாரம் பேணுவோம்

தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கையினால் பெருந்தொகையான மக்கள் இடம் பெயர்ந்து. இடம் பெயர்ந்தோர் முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்கள், வீடுகளிலும் செறிந்து வாழ்வதினால் பல தொற்று நோய்கள் மிக விரைவாகப் பரவிப் பாரிய தொற்றுப் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். எனவே, இத்தகைய நோய்கள் பரவாது தடுத்து இவற்றின் பாதிப்பிலிருந்து உங்களையும் ஏனைய மக்களையும் பாதுகாக்கப் பின்வரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வேண்டுகிறோம்.

நீர்

★ நெருப்புக் காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றோட்டம் முதலிய நோய்கள் பரவாதிருக்க கொதித்தாறிய அல்லது குளோரின் இடப்பட்ட நீரையே அருந்துங்கள்.

★ மக்கள் செறிந்து வாழும் பொழுது நீர் பற்றாக்குறை ஏற்படுமாதலால், அனாவசியமாக நீர் சிந்துதலைத் தவிர்த்து மற்றவர்களுக்கும் போதியளவு நீர் கிடைக்க உதவுங்கள்.

உணவு

★ இயன்றளவு சமைத்தவுடன் சூடாகவே உணவை உட்கொள்ளவும்.

★ சமைத்த உணவை இலையான், கரப்பான் முதலியவற்றிலிருந்து பாதுகாத்து மூடி வைக்கவும்.

★ ஆறிய உணவுகளை மீண்டும் சூடாக்கி உட்கொள்ளவும்

★ குழந்தைகளுக்குக் குளிரூட்டப்பட்ட உணவுகளையும், பானங்களையும் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

தனிநபர் சுகாதாரம்

★ அனைவரும் உணவு தயாரிக்க, உட்கொள்ள முன்னரும் மலம் கழித்த பின்னரும் சவர்க்காரமிட்டோ அல்லது வெறும் நீரிலோ கைகளை நன்றாக அலசிக் கழுவவும்.

மலகூடம்

★ அனைவரும் கட்டாயமாக மலகூடங்களைப் பாவிக்க வேண்டும்.

★ மலகூடம் இல்லாத விடத்துத் தற்காலிக குழி மலகூடங்களை அமைத்துப் பாவிக்கவும்.

★ குழந்தைகள், சிறுபிள்ளைகள் இவற்றுக்கு வெளியே மலங்கழித்தால் அவற்றை அள்ளி மலகூடங்களில் இடவும்.

பொதுக்கழிவு அகற்றல்

★ குப்பை கூழங்கள், சமையலறைக் கழிவுகள் முதலியவற்றை இவற்றிற்கென அமைக்கப்பட்டிருக்கும் கொள்கலன்களில் அல்லது குழிகளில் மட்டுமே இடவும். (ஐ)

## புங்குடுதீவு நயினாதீவு
## பல. நோ. கூ. சங்கம் [வ-து]
# முக்கிய அறிவித்தல்

**சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்**

15-07-1995 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ்/புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற விருந்த மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் தற்போது ஏற்பட்டுள்ள இராணுவநடவடிக்கை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. விசேட பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் புதிய திகதி பின்னர் தங்களுக்கு அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை சகல பொதுச்சபை உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் சிரமத்திற்கு மன்னிக்கவும்.

தலைவர்

செயலாளர்
201/1, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/1667)

## சாதனைபாடி
## மறவரைக் காப்போம்

எழுந்து பறந்து குண்டேற்றி
எங்கள் மக்களை ஏனழித்தாய்
விழுந்து சிதறிய புக்காரா - எம்
வீரம் அறிந்து கொண்டாயோ
கோயில் குடிசை மனை யெங்கும்
குண்டுகள் வீசி அழித்தாயே
தீயில் வெந்தின் றழிந்தாயே
திரும்பி நவாலியைப பார்த்தாயோ
தேவா லயத்தின் சூழலிலே
திரியும் ஆவி எமனாகி
பாவம் உன்னை பற்றினவோ
பழியைத் தீர்த்துக் கொண்டனவோ
வரிப்புலி படைத்த சாதனையை
வானம் அளந்த சேதியினை
சிரித்துப் பரணி பாடிடுவோம்
தேசம் காக்க துணிந்திடுவோம்
இரத்த தானம் செய்திடுவோம்
எங்கள் மறவரை காத்திடுவோம்
சிரத்தையோடு உணவுவகை
செய்தளித்து போற்றிடுவோம்

-காரை எம். பி. அருளானந்தன்.

★ செருமுனைச் செய்தி கேட்டு-புலி
மறவரின் வீரத்தை வியந்து போற்றும்.
திரு. வே. சிற்சபேசன்.

(37540)

## மக்கள் வங்கி சுன்னாகம் கிளை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை திங்கட்கிழமை முதல் ஸ்ரான்லி வீதிக் கிளையில் தற்காலிகமாக இயங்கும் என்றும் —

மறு அறிவித்தல் வரை மட்டுப்படுத்தப்பட்ட வேலைகள் மட்டுமே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அவசர அழைப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் கல்வி பயின்றுகொண்டிருக்கும், பயின்று வெளியேறியுள்ள உதவித் தாதியாளர், கிராமிய சுகாதார உதவியாளர், ஆரம்ப சுகாதார கவனிப்பாளர், மருந்தாளர், தட்டெழுத்தாளர், தையல் பயிலுனர் மற்றும் ஏனைய தொண்டர்கள் ஆகியோர் இடம் பெயராதுள்ளோர், இடம்பெயர்ந்துள்ளோர் 16-07-95 மு. ப. 10-00 மணிக்கு யாழ். கிளைக்கு சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

— கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
14-07-1995

[சி-1669]

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 05 - 1936

மறைவு: 15 — 07 — 1991

## அமரர் கணபதி செல்வராஜா
[ஓய்வு பெற்ற மின் இணைப்பாளர்]

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
தரணியில் அறிந்தோம் உண்மைகள் பல
என்றும் மறவோம் உங்கள் தாரகமந்திரம்
தந்தை என்பவன் இவன்தான் என்பதற்கு
தக்கதோர் உதாரண உத்தம புருஷன்
கவலையுடன் கண்ணீர் பூக்கள் தூவி
கணக்கற்ற நன்றி அஞ்சலி செலுத்துகின்றோம்

நீங்காத நினைவுகளுடன்;
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்.

சிக்னல் வீதி,
காங்கேசன்துறை.

[37485]

## செயலக கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

எதிர்வரும் திங்கள், செவ்வாய்கிழமைகளில் நடைபெற விருந்த மாவட்ட இணைப்பு, விவசாயம் கைத்தொழில், கடல்வளம், சூழல்பாதுகாப்பு தொடர்பான இணைப்புக் குழு கூட்டங்கள் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 21 — 07 — 1914

இறப்பு: 15 — 07 — 1991

## அமரர் அல்பிரட் பிரான்சிஸ் ராசு
(Retired, P. W. D. Store Keeper)

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

136, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.

(37520)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில்
ஆளணி முகாமையாளராகக் கடமையாற்றிய

## திருமதி வள்ளிநாயகி மகாதேவன்

மரணத்தையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்,
இயக்குநர்கள்,
[illegible]ளர்கள்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,

[சி-1666]

## உடைகள் வினியோகம்

தென்மராட்சி, ஜூலை 15

வலிகாமம் வடக்கு, வலிகாமம்மேற்குப் பகுதிகளிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள மக்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் உடுபுடைவைகளையும், சோப் வகைகளையும் வழங்கியுள்ளனர். [ஐ-117]

## இன்ரறக்ட் உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். இந்துக் கல்லூரி இன்ரறக்ட்கழக உறுப்பினர்களை இன்று சனி முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் சமுகமளிக்குமாறு அதிபர் கோரியுள்ளார். (ஐ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ தயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## விருதுக்கு வேட்டையா?

வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளில் நான்கு நாட்களாக நடத்திய 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் மூலம் 78 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றி விட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்புப் பகுதி நேற்று முன்தினம் அரசாங்கத்துக்கும், சிங்கள மக்களுக்கும், உலகத்துக்கும் கணக்குக் காட்டியது.

அந்தப் பகுதியில் துருப்புக்கள் நிலை கொண்டு விட்டதாகவும், காங்கேசன்துறையில் சிவில் நிர்வாகம் நடத்தப்பட இருப்பதாகவும், அரச தொடர்பு சாதனங்கள் முழங்கித் தள்ளின.

இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா இராணுவம் வெற்றிக் கொடி நாட்டி விட்டதாக பிரஸ்தாபித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் சிறிபால டி சில்வா, இன்னும் இரண்டொரு நாட்களில் அங்கெல்லாம் மின்சாரம் வந்துவிடும்; வீதிகள் போடப்பட்டுவிடும்; பெரிய பெரிய புனரமைப்பு வேலைகள் எல்லாம் செய்யப்படும்; மக்களின் வசதிகளுக்குத் தேவையான நிதி கொட்டிக் கொடுக்கப்படும் என்று ரூபவாஹினி மூலம் பொழிந்து தள்ளினார்.

இந்தப் பிரலாபங்களைக் கேட்ட சந்திரிகா, இந்த இராணுவ "வெற்றி" யோடு, இதனைக் காட்டி, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் தெற்கில் உண்டாகக் கூடிய அதிருப்திகளைச் சமாளித்து, இரண்டொரு மாதங்களில் பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று கனவு கண்டிருப்பார்.

ஆனால் சந்திரிகாவையும் முந்திக்கொண்டு முந்திரிக் கொட்டை மாதிரி, இராணுவம் எடுத்த எடுப்பில் புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டதாகக் கருதிக்கொண்டு —

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் பேச்சுக்களின் போது இனிமேல் விடுதலைப் புலிகளுக்கு விசேட முக்கியத்துவம் வழங்கப்பட மாட்டாது — என்று அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருந்தார்.

அரசு – விடுதலைப் புலிகள் போரில் நிரந்தர வெற்றி கிடைப்பது அரிது என்பதே பொதுவான கருத்து. அதிலும் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை முதலாவது கட்டம் பூர்த்தியானதும் கதிர்காமர் இவ்வாறு கருத்து வெளியிட்டமை அவரது அரசியல் கற்றுக்குட்டித் தனத்தையே காட்டுகிறது.

இராணுவ வெற்றி மாறக் கூடியது. விடுதலைப்புலிகளின் நேற்றைய தாக்குதல் அதனை இப்போது அரச தரப்பாருக்கு உணர்த்தியிருக்கும்.

அரசின் இராணுவ நடவடிக்கை, அது கூறுவது போல புலிகளுக்கு எதிரானது அல்ல; தமிழ் மக்களுக்கு எதிரானதே என்பதனை நவாலிச் சம்பவம் மூலம் வெளி உலகம் ஓரளவு உணர்ந்திருக்கும்.

இத்தகைய சூழ்நிலையில், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வென்று ஏனைய தமிழ்க் குழுக்களுடன் சேர்ந்தோ —

அல்லது —

தனது சொந்தத்தில் தனித்தோ ஒரு தீர்வைக் கொண்டுவர அரசு எண்ணுவது நடைமுறைச் சாத்தியமற்றது. விருதுக்கு வேட்டையாடும் இம்முயற்சியை அரசு உடனே கைவிட வேண்டும்.

# போரை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்க மேற்கு நாடுகள் பலவும் வற்புறுத்து!

கொழும்பு, ஜூலை 15

போரை நிறுத்தி, அதற்குப் பதிலாக சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னுரிமை கொடுக்குமாறு மேற்குலக நாடுகள் கோரியுள்ளன.

தற்போதைய போரினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்தும், உடைமைகளுக்கு பெரும் சேதம் ஏற்படுவது குறித்தும் தமது கவனத்தை வெளியிட்ட மேற்குலக நாடுகள் —

போருக்குப் பதிலாக சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஸ்ரீலங்கா அரசைக் கோரியுள்ளன.

பொதுமக்கள் உயிரிழப்பு, பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப்படல், போரில் சிக்கி அப்பாவிப் பொதுமக்கள் அல்லற்படுதல் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டிய இந்நாடுகள் —

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக போரை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் கோரியுள்ளதாக செய்தி ஏஜென்சிகள் அறிவித்தன.

தற்போதைய போரினால் ஏற்பட்ட அழிவுகள் குறித்து கவலை வெளியிட்டுள்ள ரஷ்ய அரசு, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வற்புறுத்திக் கேட்டுள்ளது.

போரினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவியலாது எனக் குறிப்பிட்டுள்ள கனடா அரசு —

சமாதான முயற்சிகளுக்கு உதவுவதற்கு தான் வழங்கிய உறுதி மொழியை மீண்டும் புதுப்பிப்பதாக அறிவித்தது.

இராணுவ நடவடிக்கைகளினால் மட்டும் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது என்பது இலகுவான காரியமன்று என மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டதாகவும் செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டன. (உ-6)

## அளவெட்டி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

அளவெட்டி முதல் தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் மணல் அணைகளால் அரண் அமைத்திருந்த இராணுவத்தினரின் நிலைகள் மீது—

கடும் ஷெல் தாக்குதல்களுக்கு மத்தியில் தீரத்துடன் முன்னேறி புலிகள் உக்கிரச் சண்டை புரிந்து படையினரை விரட்டியடித்தனர்.

கடந்த ஐந்து நாள் சண்டையில் 78 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றிய அரச படைகள், கைப்பற்றிய பகுதிகளை நழுவவிடாது பாதுகாக்கப் போராடிக் கொண்டிருக்கின்றன — என்று ஸ்ரீலங்கா ராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

சுமார் மூவாயிரம் விடுதலைப் புலிப் போராளிகள் அரச படைகளுக்கு எதிராக பெரும் தாக்குதலை நடத்தி இருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## 12 குண்டு----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகளே வீசப்பட்டு நூறுக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

புக்காரா விமானம் ஆர்ஜன்ரீனா நாட்டுத்தயாரிப்பாகும். ஸ்ரீலங்கா விமானப்படையிடம் மொத்தம் நான்கு புக்காராக்கள் உண்டு.

புக்காரா விமானம் 14.25 மீற்றர் (45 அடி 9 அங்) நீளமுடையது. 3,000 மீற்றர் உயரத்தில் மணித்தியாலத்துக்கு 500 கிலோ மீற்றர் வேகத்திலும் —

6,000 மீற்றர் உயரத்தில் மணிக்கு 480 கிலோ மீற்றர் வேகத்திலும் — பறக்கக் கூடியது. இந்த விமானம் 32,800 அடி உயரம் வரை பறக்கும்.

இந்த விமானத்தின் மேல் எழுவதற்கான ஓடுபாதை ஓட்டம் 985 அடியாகும். 3,016 லீற்றர் எரிபொருளை ஒரே முறையில் எடுத்துச் செல்லவல்லது.

இந்தவிமானத்தில் 20மி.மீ. பீரங்கிகள் இரண்டு பொருத்தப்பட்டிருக்கும். அவற்றோடு எம். 2 30 இயந்திரத் துப்பாக்கிகள் நான்கும் விமானத்தின் உட்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும்.

2.75 அங்குல விட்டமுடைய ஒல்வொன்றும் 19 றொக்கெட்டுக்கள் அடங்கிய ஏழு றொக்கெட் செலுத்திகளை கொண்டு செல்லும் வசதி இந்த விமானத்துக்கு உண்டு.

250 கி. கிறாம், 500கி கிறாம் எடையுள்ள குண்டுகளையும் இவ்விமானம் கொண்டுசென்று வீசும் வல்லமை கொண்டது. (அ)

## வயது குறைந்த விமானியே புக்காராவுடன் பலியானார்

வீழ்த்தப்பட்ட புக்காரா ஜெட் விமானத்தை பிளைட் லெப்டினன்ட் டி. எவ். டி. எஸ். பெரேரா செலுத்தி வந்தார் என அறிவிக்கப்படுகின்றது.

தாக்குதலை அடுத்து புக்காரா சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் சென்று கீழே விழுந்ததாகவும் —

விமானியின் சடலத்தையும், விமானத்தின் சிதைவுகளையும் படையினர் மீட்டதாகவும் — அறிவிக்கப்பட்டது.

26 வயதுடைய இந்த விமானியே ஸ்ரீலங்கா விமானப் படையில் மிகவும் வயது குறைந்த விமானியாவார். 1989 இல் கடேற் அதிகாரியாக அவர் விமானப்படையில் சேர்ந்தார்.

அவரின் பூதவுடல் இரத்மலானையில் உள்ள அவரது வீட்டில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

## விரட்டியடிக்கும் வரை சண்டை தொடரும்!

ஸ்ரீலங்கா அரசுப் படைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமைக்குப் பின் முன்னேறிய பகுதிகளில் இருந்து அப்படைகளை விரட்டியடித்து பழைய நிலைகளுக்குத் திரும்பச் செய்யும் வரை சண்டை தொடரும்.

விடுதலைப் புலிகளின் உயர் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

படையினர் முன்னேறிய அனைத்து முனைகளிலிருந்தும் அவர்கள் விரட்டியடிக்கப்படுவர் என்று அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

நேற்று அதிகாலை 1-00 மணிக்கு ஆரம்பமான— படையினரை விரட்டியடிக்கும் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## ஏவுகணையே தாக்கியது!

நிலத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையின் தாக்குதலிலேயே புக்காரா விமானம் வீழ்த்தப்பட்டதாக கொழும்பு இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஆஸ்திரேலிய வானொலி அறிவித்தது.

ஒற்றை இருக்கை கொண்ட இந்த விமானம் முன்னேறிச் செல்லும் தரைப்படையினருக்கு வான்வழிப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த சமயம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். [எ]

## 700 படையினர் பலி என கொழும்பில் பரவிய செய்தி!

நேற்று புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்நூறு படையினர் முதல் எழுநூறு படையினர் வரை உயிரிழந்ததாக கொழும்பில் நேற்று செய்திகள் பரவின.

இச்செய்தியை மறுத்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்கா இவ்வளவு எண்ணிக்கை உயிரிழப்பு ஏற்படவில்லை என்றார்.

படைவட்டாரங்களில் இருந்து கிடைக்கும் அதிகாரபூர்வமற்ற செய்திகளின் படி —

புலிகளின் இப்பெரும் பதிலடித் தாக்குதல் படைகளின் அப்பகுதி கட்டளைத் தலைமையகத்தைத் தகர்த்து விட்டதென்றும் —

அதனால் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாகவே பெருமளவு உயிரிழப்புகளும் சேதங்களும் ஏற்பட்டிருக்கலாம் என்றும் —

தெரிவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது. [உ-4]

## 100க்கு அதிக---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கக் கூடும் என்றும் —

காயமுற்ற 42 படையினர் பலாலிக்கு எடுத்து வரப்பட்டதாகவும் —

ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

நாற்பது படையினர் கொல்லப்பட்டதாக 'வொய்ஸ் ஒவ் அமெரிக்காவும்'' —

ஐம்பத்திரண்டு படையினர் உயிரிழந்ததாக "றொய்ட்டர்" செய்தி நிறுவனமும் —

நூற்றுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் காயமடைந்ததாக பி.பி.ஸியின் தமிழ் சேவையும் —

நம்பத்தகுந்த இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி அறிவித்தன.

## விவசாயிகளின் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம் ஜூலை 15

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம், பெறும் விவசாயிகளின் ஜூன் மாதத்திற்குரிய ஓய்வூதியம், கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்டக் காரியாலயத்தில் தற்போது வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## புலிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தயார் செய்து கொள்வதற்காகவே.

விமர்சகர்கள் இவ்வாறு கூறியதாக "வெரித்தாஸ்" வானொலி குறிப்பிட்டது. (உ-4)

## புனித---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கண்ணன் (கந்தையா கிருபானந்தன் — மல்லாகம்)

★ வெள்ளை (கணபதிப்பிள்ளை கஜேந்திரன் — கொக்குவில் கிழக்கு)

★ உரிமைவீரன் (சுந்தரலிங்கம் மோகனராஜ் — அளவெட்டி)

★ மலரவன் (நல்லதம்பி சந்திரசேகர் — புத்தூர் கிழக்கு]

★ இந்திரன் அல்லது ஓவியன் (நவரத்தினம் கிரிதரன் அரியாலை)

★ பெருந்தேவன் அல்லது பிரசாந்தன் (செந்தமிழ்ச்செல்வன் தவசீலன் — கொக்குவில்]

★ சுரேந்திரன் அல்லது பாபுஜி [சண்முகம் ஜெயனந்தராசா — மட்டக்களப்பு)

★ சந்திரசேகரம் [தண்டபாணிமூர்த்தி சசிகுமார் — அரியாலை]

★ மன்னன் [லோகநாதன் கோகிலன் — யாழ்ப்பாணம்)

★ மலையம்மான் (இராசரட்ணம் பஞ்சலிங்கம் — மட்டுநகர்]

★ சர்மிளா [அன்ரனி லூட்ஸ்மேரி — நுவரெலியா]

★ தென்றல் (கண்மணி — அரியாலை]

★ முருகன் அல்லது அரபாத் [திருஞானசம்பந்தர் சண்முகராசா — காரைநகர்)

★ சோமநாதன் (குமாரலிங்கம் கதிர்காமநாதன் — இணுவில் கிழக்கு]

★ சரித்திரன் அல்லது ஜஸ்மின் [சினித்தம்பி அருளம்பலம் — மட்டுநகர்]

★ மாதவன் அல்லது சிரேஸ்வரன் (சினித்தம்பி நேசராசா — அம்பாறை).

★ ஜிரேன் அல்லது நளன் (அண்ணாமலை சிறீகாந்தன் — திருமலை).

★ கௌதமன் அல்லது ஈழச்செல்வன் (வர்ணகுலசிங்கம் முரளிதாஸ் — திருமலை).

★ நிதி (கோபாலபிள்ளை மஞ்சுளா — திருமலை).

★ வண்ணஃசந்திரன் அல்லது நீதன் மாறன் (இராஜையா கோவிந்தன் — மட்டக்களப்பு).

★ பகீரதன் (சிவலிங்கம் சந்திரகுமார் — மட்டக்களப்பு)

இந்த மோதலில் வீரமரணமடைந்த 4 போராளிகளின் வித்துடல்கள் இன்று பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை பழைய பேருந்து நிலைய முன்றலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலுமில்லத்தில் புனித விதை குழியில் விதைக்கப்படும்.

★ வீரவேங்கை இதயன் (மாரிமுத்து ரகு — அல்வாய்)

★ வீரவேங்கை முத்தெழில் அல்லது குகன் [கணபதிப்பிள்ளை ராஜ்குமார் — பருத்தித்துறை)

★ வீரவேங்கை மலையரசன் [கோவிந்தன் செல்வநாயகம் — கொழும்பு)

★ வீரவேங்கை ரவீக்கா அல்லது பொற்கொடி (குமாரகுருசாமியோக லட்சுமி — வல்வெட்டித்துறை)

இத்தாக்குதலில் வீரமரணமடைந்த 6 மாவீரர்களின் வித்துடல்கள் இன்று பிற்பகல் 8 மணிக்கு கொடிகாமம் சந்தை முன்றில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்படும்.

★ வீரவேங்கை கலையரசன் [தனபாலசிங்கம் தனசீலன் — பளை)

★ வீரவேங்கை குலமகன் [சின்னத்தம்பி வள்ளிபம்மை — நுணாவில்]

★ வீரவேங்கை வரதன் [கோணமலை சேகர் — திருமலை]

★ வீரவேங்கை நிலவன் [சின்னத்துரை குமணன் — சாவகச்சேரி]

★ வீரவேங்கை வல்லவன் [தாமோதரம்பிள்ளை தவராசா — குரும்பசிட்டி]

★ வீரவேங்கை இளங்குமணன் அல்லது வக்சன் (சின்னக்கந்தன் வீரேந்திரன் — மட்டக்களப்பு. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசர அழைப்பு

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்

அனைவரையும் இன்று 15-07-95 காலை 9-30 மணிக்கு கல்லூரியில் கூடுமாறு வேண்டுகின்றோம்.

மாணவர் அவை,

(37539) யாழ். தொழில் நுட்பக் கல்லூரி,

# ஷெல் மழை தொடர்கிறது மேலும் ஐவர் நேற்று பலி!

## 16 பேர் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வலிகாமம் வடக்கு பகுதிகளை நோக்கி படையினர் நேற்று முன்தினம் இரவும் நேற்றும் அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இத் தாக்குதல்களினால் சுன்னாகத்தில் இரு சிறுவர் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர். 16 பேர்வரை காயம் அடைந்தனர்.

மானிப்பாயில் ஒருவர் உயிரிழந்தார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த கதிரமலை சிவபாதம் (வயது 55) சுன்னாகம் பருத்திக்கலட்டியைச் சேர்ந்த எஸ். நாராயணபிள்ளை (வயது 55) ஆகியோர் நேற்றுக்காலை ஷெல் தாக்குதல்களில் உயிரிழந்தனர்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் மயிலங்காடு பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் சிவரத்தினம் வயிந்தன் (வயது 5) என்ற சிறுவனும் அவரின் சகோதரரான மற்றொரு சிறுவனும் உயிரிழந்தனர்.

மானிப்பாயில் சந்தியாப்பிள்ளை வசந்தகுமார் [வயது 38) என்பவர் உயிரிழந்தார். நேற்று மாலை வீட்டைப் பார்க்கச் சென்ற போது இவர் ஷெல் தாக்குதலுக்கு உள்ளானார்.

சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் காயம் அடைந்தோர் விவரம் வருமாறு:-

மல்லாகத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த முத்துக்குமார் கலாவதி (வயது 47) அவரின் பிள்ளைகளான மு. நிஷான்குமார் (வயது 17) மு. தர்சினி (வயது 15) —

மற்றும் இரத்தினகுமார் உதயகுமார் (வயது 15) ஏ. சாந்தி (வயது 19) ஆர். மாலினி (வயது 88)—

சுன்னாகத்தில் எஸ். சுந்தரலிங்கம் (வயது 40), வேலுப்பிள்ளை (வயது 85), சத்தியசீலன் [வயது 14], தவம் (வயது 45), சற்குணபாலன் (வயது 42) ஆகியோரும் காயம் அடைந்தனர்.

நேற்று பிற்பகல் 2-00மணியளவில் சுன்னாகம் மயிலங்காட்டுப்பகுதியில்இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் பாலகுலேந்திரன்சுஜாதா(வயது7), அவரது சகோதரரான பா. சுதர்ஸன் (வயது12), சற்நணலிங்கம் அனுஜதி [வயது 19], தம்பு பூரணம் (வயது 64) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரச படையினரின் ஷெல் தாக்குதல்களினால் வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் மேற்குப் பகுதிகளில் பொது மக்களின் உடைமைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

[இ-15]

## மரண அறிவித்தல்கள்

### திருஞானசம்பந்தன் சண்முகராசா

[அரபாத்]

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருஞானசம்பந்தன் சண்முகராசா (பழைய மாணவன், யாழ். மத்திய கல்லூரி) நேற்று [14-07-95] வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவர் திருஞானசம்பந்தன் பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், சண்முகநாதன் [ஜேர்மனி], பவானி, சண்முகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற அம்பலவாணர் [கிளாக்கர்] தம்பதிகளினதும், காலஞ்சென்ற இ. ச. பேரம்பலம் [E S P] மாணிக்கம் தம்பதிகளினதும் அன்புப்பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தி. சண்முகரத்தினம் (இரத்தினி)

P. நாகரத்தினம் (E. S. P)

இல. 48/1, அம்மன்வீதி,

சந்தர்மடம்,

யாழ்ப்பாணம். (37546)

### திருமதி மகாதேவன் வள்ளிநாயகி

(வள்ளி)

(ஆவணி முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை)

பளை வீமன்காமத்தை வசிப்பிடமாகக் கொண்ட மகாதேவன் வள்ளிநாயகி 14 07-95 காலை காலமாகிவிட்டார். அன்னார். காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையாவின் மகளும், காலஞ்சென்ற மகாதேவனின் அன்பு மனைவியும், செந்தூரன், விஜிந்தன் [மாணவர்கள் சுதுமலை சிந்மய பாரதி) ஆகியோரின் அருமைத் தாயாரும், கதிர்காமநாதன், விஜயரட்ணம் இரத்தினபூபதி, செல்வராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 14-07-95 மாலை 2மணியளவில் விதானையார் ஒழுங்கை இருபாலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:

பிள்ளைகள்

விதானையார் ஒழுங்கை,

இருபாலை. (37537]

### கதிர்காமர் நாரயணபிள்ளை

[சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னைநாள் பாதுகாப்பு ஊழியர் - லொக்கோ பகுதி ஊழியர்]

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பருத்திக்கலட்டி, சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான க. நாராயணபிள்ளை நேற்று அகால மரணமானார்.

அன்னார் சரஸ்வதி – நாராயணபிள்ளையின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன், ஜெயதரன் [மின்னியல் பகுதி, சிமெந்துக் கூட்டுத்தாபனம்], கெங்காதரன் (France), கிரிதரன் [France] ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி ஸ்ரீதரன், ஜெயந்தி ஜெயதரன் [ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை], வசந்தி கெங்காதரன் (France) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை [14 – 7 – 1995] நேற்று உப்புக்கேணி வீதி, சங்கத்தானை சாவகச்சேரியில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நா. ஜெயதரன்

[37544] [மகன்]

### அரியகுட்டி - கனகரத்தினம்

இணுவில் மேற்கைச் சேர்ந்தவரும், மன்னார் கல்வித் திணைக்கள ஊழியருமான அரியகுட்டி - கனகரத்தினம் கொழும்பில் 11 - 07 - 95 இல் காலமாகிவிட்டார்.

இவர் அரியகுட்டி பொன்னம்மா தம்பதிகளின் புத்திரரும், கட்டுவனைச் சேர்ந்த (காவடித்] தம்பு தம்பதியரின் புதல்வி இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், ஹேமமாலினி, அருளொளிபவன், பங்கயச் செல்வி, பவமொழியவன், நேசப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மன்னாரில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இத்தால் அறியத்தருகிறோம்.

தகவல்:

அரியகுட்டி பூபாலசிங்கம்

(சகோதரர்)

வேப்படி ஞானவைரவர் கோவிலடி,

இணுவில் மேற்கு. (37550]

## கல்விக்கழக ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

சமிகானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில், கல்விக்கோட்ட பாடசாலைகளின் கல்விக்கழக ஆசிரியர்களுக்கான ஜூன் மாத உதவு தொகைக் கொடுப்பனவு தமிழீழக் கல்விக்கழக நடுவப்பணியகத்தில் இன்று சனிக்கிழமை முதல் வழங்கப்படும். ஏனைய கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான உதவு தொகை கல்விக்கோட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதிபர்களின் சிபார்சைப் பெற முடியாதவர்கள் சென்ற மாத சிபார்சுச் சான்றின் உதவியுடன் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளமுடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ]

## இரத்த தானம் செய்வீர்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வலிகாமம் பகுதியில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோதலில் காயமடைந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளையும்—

இராணுவத் தாக்குதல்களால் காயமுற்று உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பொதுமக்களையும்—

காப்பாற்றுவதற்காக இரத்ததானம் செய்யுமாறு யாழ். போதனாவைத்தியசாலை இரத்தவங்கி பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. [அ-15]

## அங்கே செல்லாதீர்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

இராணுவத்தினரிடமிருந்து மீட்ட வலி. மேற்கு வலி. வடக்குப் பகுதிகளுக்கு பொதுமக்களைச் செல்ல வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

இப்பகுதிகளில் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், இராணுவத்தினர் கண்டபடி ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதாலும் மக்கள் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. விட்டு வந்த பொருள்களை எடுப்பதற்காகவோ அல்லது அகப்பட்ட உறவினர்களைப் பார்ப்பதற்காகவோ அங்கு செல்ல வேண்டாம் என்று பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

(இ)

## ஜெட் விமானம் வீழ்ந்தது போரில் புதிய பரிமாணம்

### ஆய்வாளர்கள் கருத்து

ஈழ விடுதலைப் போரில் "ஜெட்" விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

சியாமாசெட்டி, அவ்ரோ மற்றும் வை-8 ரக விமானங்களே விடுதலைப் புலிகளால் இதுவரை காலமும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

மிகவேகமாகப் பறந்து குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தும் ஜெட் விமானத்தை புலிகள் நிலத்திலிருந்து தாக்கி வீழ்த்தியிருப்பது புலிகளின் பலம் குறித்து ஆச்சரியப்படத்தக்க ஒரு நிலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளிடம் உள்ள விமான எதிர்ப்பு ஏவுகணை எந்த வகையைச் சேர்ந்தது என்பது குறித்து பல்வேறு ஊகங்களைப் கொண்டிருக்கும் ஸ்ரீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு ஜெட்விமானம் மீதான தாக்குதல் மேலும் பல சந்தேகங்களைக் கிளப்பியிருக்கும் என்றும் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

## இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இடம் பெயர்ந்தோருக்கான 27பி, 28ஏ புள்ளிகளுக்குரிய நிவாரணப் பொருள்கள் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் காரியாலயத்தின் கீழ் அமைந்துள்ள கட்டடத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ]

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் கந்தையா கிருபாகரன்

(கண்ணன் - போராளி)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருபாகரன் (கண்ணன் - போராளி) நேற்று வீர மரணமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா, தங்கம் தம்பதிகளின் அன்பு மகனாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி. ப 2 00 மணிக்கு காவிகோயிலடி நீர்வேலி என்ற இடத்தில் நடைபெற்று வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்படும்.

தகவல்:

குடும்பத்தினர்

(37551)

### தண்டபாணிமூர்த்தி சசிகுமார்

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், தற்போது 66, இலந்தைக்குளம் வீதி, அரியாலையில் வசிப்பவருமான (விக்கி) தண்டபாணி மூர்த்தியின் புதல்வர் சசிகுமார் (சந்திரசேகரம்) 14 - 7 - 95 நேற்றைய பலாலிச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தண்டபாணிமூர்த்தி (விக்கி)

(37548) (தகப்பன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 - 07 - 1995 இல் அச்சிட்டுப் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org